## 2

# கிறிஸ்துவின் செயல்களைச் செய்தல்

## (யோவான் 14)

*"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (வசனங்கள் 12-14)*

நமது கர்த்தர், தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய இரவில், மேல் வீட்டில் தமது அப்போஸ்தலர்களை ஊக்குவிக்கையில், அவர்கள் இந்த உலகத்தில் தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்வார்கள் என்று அவர்களிடம் கூறினார். விசுவாசம் நிறைந்த ஒவ்வொரு மனிதரும் செய்ய வேண்டியது போன்றே, இயேசு தமது வாழ்வை நிறைவுக்குக் கொண்டுவந்தார்; அவர் தாம் சென்றபின்பும் தமது ஊழியம் தொடர வேண்டி, எல்லாவற்றையும் அதனதன் இடத்தில் வைத்தார். அவர் மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்தார், அப்போது அவர் தமது வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றின் விரிவாக்கத்திற்காக இந்த அப்போஸ்தலர்களைத் தயார் செய்வித்தார். அவர் ஒரு ஊழியத்தைத் தொடங்க, "கிறிஸ்தவம்" என்று நாம் அழைக்கும் இயக்கத்தைத் தொடங்க வந்தார். அவரது ஊழியம் அதன் தொடர்ச்சியில் உலகம் முழுவதிலும் பரவ வேண்டியதாகவும் தனது குணமாக்கும் கதிர்களை, அவர் மீண்டும் வரும்வரையில் அனுப்ப வேண்டியதாகவும் இருந்தது.

அவருக்காக அவரது அப்போஸ்தலர்கள் செய்ய வேண்டியிருந்த ஊழியம் என்று அவர் குறிப்பாக எதைக் கூறினார்?

### இயல்பில் அவரது செயல்கள் போன்றது

*அப்போஸ்தலர்களின் செயல்கள் இயல்பாகவே இயேசு செய்திருந்த செயல்கள் போன்றே இருக்கும்.* "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ... என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்" *(14:12அ).* கிறிஸ்துவின் செயல்களை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், அவற்றின் தூய்மை, மகிமை மற்றும் தொலைவில் சென்றடையும் செயல்விளைவுகள் ஆகியவற்றினால் நாம் பயபக்தி அடைகிறோம். வேதவசனங்களில் நாம் அவரை, பார்வையற்றவர்களின் கண்களைத் திறப்பவராக, தொழுநோயாளிகளைக் குணமாக்குபவராக, மரித்தோரை உயிருடன் எழுப்புபவராக மற்றும் பரிபூரணமான பிரசங்கங்களைப் பிரசங்கிப்பவராகக் காணுகிறோம். அப்படி என்றால், தம்மைப் பின்பற்றுபவர்கள்

*தமது செயல்களைச் செய்வார்கள் என்று இயேசு கூறியபோது, அவர் அர்த்தப்படுத்தியது என்ன?*

அவர்களை அவர் ஊக்குவித்த விஷயம் இரு திசைகளில் சென்றது. முதலில் அவர், அப்போஸ்தலர்கள் பிற்பாடு என்ன செய்வார்கள் என்பதைப் பற்றிப் பேசினார் - பரிசுத்த ஆவியானவர் மூலமாக அவர்கள் நிகழ்த்த இருந்த அற்புதங்கள் மற்றும் அவர்கள் பிரசங்கிக்க இருந்தவைகள். மேலும் அவர், எல்லாக் கிறிஸ்தவர்களின் நல்ல செய்களைப் பற்றிச் சிந்தித்தார், அவைகள் அவரே செய்த செயல்களைப் போன்ற இயல்புடையவையாக இருக்க வேண்டும். இயேசுவின் செயல்கள் யாவும் பிதாவையும் அவர் கொண்டு வர நாடிய நித்திய வாழ்வையும் சுட்டிக்காண்பித்தன. அவரது பின்பற்றாளர்கள் காலத்தின் முடிவு வரையிலும் இதே வகையான செயல்களைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். கிறிஸ்துவின் செயல்கள் அவற்றின் நீடித்த தன்மையில் நித்தியமானவையாக, அவற்றின் அடிப்படை நோக்கத்தில் ஆவிக்குரியவையாக மற்றும் பிசாசின் செயல்களை அழிப்பதில் இயக்கமுள்ளவையாக இருக்கின்றன!

## தரத்தில் அவரது செயல்கள் போன்றது

*அப்போஸ்தலர்களின் செயல்கள் தரத்தில் இயேசு செய்திருந்தவற்றைக் காட்டிலும் பெரியவையாக இருக்கும்.* "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" (14:12ஆ). அப்போஸ்தலர்களும் அவர்களைத் தொடர்ந்து கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களும், கிறிஸ்துவைக் காட்டிலும் பெரிய செயல்களை எவ்வாறு செய்ய முடியும்?

கிறிஸ்து கொண்டுவந்த இரட்சிப்பை மற்றவர்களுக்கு *நடைமுறைப் படுத்துவதன் மூலம்,* கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் காட்டிலும் பெரிய செயல்களைச் செய்ய முடியும். பிந்திய இந்தச் செயல்கள், இயேசு உருவாக்கிய இரட்சிப்பை வைத்து அதை மக்களின் வாழ்வில் உறுதிப்படுத்தும். பாவங்கள் மன்னிக்கப்படும், ஆத்துமாக்கள் மீட்கப்படும் மற்றும் மக்கள் தேவனுடனான ஐக்கியத்திற்குள் கொண்டு வரப்படுவார்கள். விளைவுகள் என்பவை எப்போதுமே, அவற்றை இருக்கக் கொண்டுவரும் அடித்தளச் செயல்களைக் காட்டிலும் பெரியவையாக உள்ளன. உண்மைநிலை என்பது எப்போதுமே, உண்மை நிலையை உண்டாக்கும் தயாரிப்பைக் காட்டிலும் பெரியவையாக உள்ளன. யார் பெரியவர்: ஒன்பது மாதங்களாகத் தனது கர்ப்பப்பையில் ஒரு குழந்தையைச் சுமக்கும் பெண்ணா அல்லது உலகத்தில் பிரவேசித்து அற்புதமான மனிதனாக வளரும் அந்தக் குழந்தையா? எது பெரியது: நடுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் ஒரு நிலத்தைத் தயார் செய்வதா அல்லது அதில் விளைந்து, மனிதர்களுக்கு உணவும் ஊட்டமும் அளிக்கப் பயன்படும் அப்பம் செய்யப் பயன்படும் கோதுமையா?

இயேசு செய்திருந்த எல்லாச் செயல்களினாலும் அவர் உருவாக்கியிருந்த சுவிசேஷமானது, அதன் முழுநிறைவுடன் பெந்தெகொஸ்தே நாளன்று பிரசங்கிக்கப் பட்டது. அதற்கு மூவாயிரம்பேர்கள் கீழ்ப்படிந்து, இங்கும், வர இருக்கும் நித்திய ஜீவனிலும் நிறைவாழ்விற்கென்று இரட்சிக்கப்பட்டனர். இரட்சிப்பைச் சாத்தியமாக்குவதற்கு இயேசு செய்தது மாபெரும் செயலாகவே

இருந்தது - ஆனால் இயேசு ஏற்படுத்தி வைத்த செயலை நிறைவேற்றிய கருத்தமைவில், எருசலேமில் மக்களை இரட்சிக்கச் சுவிசேஷத்தை அனுமதித்தல் என்பது இன்னும் மாபெரும் செயலாக உள்ளது.

## அதிகாரத்துவத்தில் அவரது செயல்கள் போன்றது

*அதிகாரத்துவத்தில், இயேசுவுக்குப் பதிலான நிலையில் அப்போஸ்தலர்களின் பணிகள் செய்யப்பட வேண்டியிருந்தன.* அவர் பிதாவினிடத்திற்குச் சென்று கொண்டிருந்ததால் அவர்கள் அவருடைய பணிகளைச் செய்ய வேண்டியவர்களாய் இருந்தனர் (14:12இ). தேவனுடைய நித்திய நோக்கத்தை அவர் (இயேசு) அதனிடத்தில் வைத்திருந்தார். அப்போஸ்தலர்களும் அவரைப் பின்பற்றும் யாவரும், அவரது ஊழியத்தைச் செயல்படுத்த வேண்டி இருந்தது. அவர் தமது ஊழியத்தை அறிவித்து அதைச் சாத்தியமானதாக ஆக்கியிருந்தார், ஆனால் அதை நிறைவேற்றும்படி அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். அவரது மாபெரும் அதிகாரத்தினால், அவர்கள் எங்கும் சென்று மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். அவ்வாறு செய்வதில் அவர்கள், மக்களுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக நிற்பார்கள்.

## பலத்தில் அவரது செயல்கள் போன்றது

*பலத்தைப் பொறுத்தமட்டில், அப்போஸ்தலர்களின் ஊழியங்கள் அவரது வல்லமையினாலேயே செய்யப்பட வேண்டியவையாக இருந்தன.* "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (14:13, 14). இயேசு, தமது ஊழியத்தைத் தமது அப்போஸ்தலர்கள் தனியே செய்யத் தேவையில்லை என்பதை அறிய வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் ஜெபத்தின் மூலமாகப் பிதாவின் ஆதாரவளங்களைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கேட்கும்போது, அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். இயேசுவின் நாமத்தில் கேட்டுக் கொள்ளுதல் என்பதே அவர்கள் செய்ய வேண்டிய யாவுமாக இருந்தது, மற்றும் அவர்களுக்குத் தேவையான யாவையும் அளிக்கப்படும்.

இயேசுவின் வாக்குத்தத்தம் ஒரு துணைநிலைக் கருத்தமைவில் நமக்கு நடைமுறைப்படுகிறது. இயேசு தமது கட்டளையைக் கொடுத்ததில் (மத்தேயு 28:18-20), அவரது செய்தியை அவரது சீஷர்கள் மற்றவர்களுக்குப் போதிக்கச் செல்லுகையில், தாம் அவர்களுடன் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். அவர் பிதாவினிடத்தில் திரும்பிச் சென்றபின், அவரது பலம், ஞானம் மற்றும் ஆதரவு ஆகியவை அவர்களுடன் சென்றன மற்றும் இன்றைய நாட்களில் நாம் நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்குப் போதிக்கையில், அவரது தெய்வீகப் பிரசன்னம் நம்முடன் உள்ளது.

## முடிவுரை

அந்த மேல்வீட்டில் இயேசு, அப்போஸ்தலர்களுக்கும் நமக்கும், எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய ஊழியம் பற்றிக் கொடுத்த ஊக்குவித்தல்தான் என்ன! கர்த்தரைப் பின்பற்றுபவர்கள், அவர் செய்திருந்த அதே வகையான செயல்களைச் செய்வர், அவர்கள் அவர் செய்திருந்தவற்றைக்

காட்டிலும் பெரிய செயல்களையும் செய்வர், அவர்கள் அவரது செயல்களை அவருக்குப் பதிலாகச் செய்வர், மற்றும் அவர்கள் அவரது பெலத்தில் தங்கள் செயல்களைச் செய்வர். இந்த அப்போஸ்தலர்களுக்கு அவரது வார்த்தைகள், இரவுக் காவலர்கள் போன்று நிற்கின்றன, அவைகள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள், கிறிஸ்து மறுபடியும் வரும்வரைக்கும் ஊழியங்களைக் கவனமாகச் செய்வதற்கு அவர்களை அழைக்கின்றன.

*"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்" (எபேசியர் 2:8-10).*

*"அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" (யாக்கோபு 2:17).*